


நேற்று (05.05.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு37, எம்.கே.பி. நகர், மத்திய நிழற்சாலையில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சறுக்கு விளையாட்டு மைதானத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் ஆர்.பிரியா, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். டி.சேகர், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர் ஜெ.டில்லிபாபு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு’ சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!



## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 'நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு' என்ற தலைப்பில் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று அறிவிப்புக்கு இணங்க புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

**நாடு போற்றும் நான்காண்டு**

**தொடரட்டும் பல்லாண்டு**

**தி மு க அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்**

| வ.எ | நாள் | ஒன்றியம் | பேச்சாளர் | செல் நம்பர் |
|---|---|---|---|---|
| 1 | 08.05.2025 | திருமயம் தெற்கு | திரு.இனியன் அமுதன் | 90807 47878 |
| 2 | | அரிமளம் வடக்கு | திரு.சு.பாலகிருஷ்ணன் | 98430 17405 |
| 3 | | மணமேல்குடி தெற்கு | திருமதி.தஞ்சை கலைமணி பாரதி | 98653 33354 |
| 4 | 09.05.2025 | திருவரங்குளம் கிழக்கு | திரு.இனியன் அமுதன் | 90807 47878 |
| 5 | | அரிமளம் தெற்கு | திரு.பாலக்கரை டி.கோவிந்தன் | 97159 38728 |
| 6 | | அறந்தாங்கி தெற்கு | திரு.வயலூர் கா.கிருஷ்ணமூர்த்தி | 99765 96810 |
| 7 | 10.05.2025 | திருமயம் வடக்கு | திரு.சு.பாலகிருஷ்ணன் | 98430 17405 |
| 8 | | அறந்தாங்கி நகராட்சி | திருமதி.தஞ்சை கலைமணி பாரதி<br>திரு.சு.சுகநிலவன் | 98653 33354<br>95978 93920 |
| 9 | | ஆவுடையார்கோவில் வடக்கு | திரு.தீக்கனல்.என்.செல்வம் | 97902 23332 |
| 10 | | அறந்தாங்கி மேற்கு | திரு.A.சிவா.(எ)சிவக்குமார் | 99443 51892 |
| 11 | 11.05.2025 | பொன்னமராவதி வடக்கு | திரு.பாலக்கரை டி.கோவிந்தன் | 97159 38728 |
| 12 | | அறந்தாங்கி கிழக்கு | திரு.A.சிவா.(எ)சிவக்குமார் | 90807 47878 |
| 13 | | ஆவுடையார்கோவில் தெற்கு | திரு.வயலூர் கா.கிருஷ்ணமூர்த்தி | 99765 96810 |
| 14 | 12.05.2025 | பொன்னமராவதி தெற்கு | திரு.முகமது இலியாஸ் | 99943 62600 |
| 15 | | மணமேல்குடி வடக்கு | திரு.தீக்கனல்.என்.செல்வம் | 97902 23332 |
| 16 | | திருவரங்குளம் மேற்கு | திருமதி.தஞ்சை கலைமணி பாரதி | 98653 33354 |
| 17 | 13.05.2025 | திருவரங்குளம் தெற்கு | திரு.முகமது இலியாஸ் | 99943 62600 |

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.

## சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நாடுபோற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திராவிட மாடல் நல்லாட்சியின் நாடு போற்றும் நான்காம் ஆண்டு - தொடரட்டும் பல்லாண்டு என்ற தலைப்பில் கூட்டங்கள் நடத்திட வேண்டுமென்ற அறிவிப்புக்கு இணங்க சென்னை வடக்கு மாவட்டதிமுக சார்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்பகுதி வாரியாக கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

| நாள் | பேச்சாளர் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 08.05.2025 | அத்திப்பட்டு சாம்ராஜ் | பாஷ்யம் தெரு, சுழல் மெத்தை அருகில் இராயபுரம் கிழக்கு பகுதி | இரா. செந்தில் குமார் பகுதி செயலாளர் |
| 08.05.2025 | ஆரணி வெ.அன்புவாணன் | பழனியாண்டவர் கோயில் தெரு பெரம்பூர் தெற்கு பகுதி | க. ஜெயராமன் பகுதி செயலாளர் |
| 09.05.2025 | சிவ. அருணகிரி | தாளமுத்து நடராசன் மன்றம் அருகில், மீனாட்சியம்மன் பேட்டை, இராயபுரம் மேற்கு பகுதி | வ. பெ. சுரேஷ் பகுதி செயலாளர் |
| 10.05.2025 | அத்திப்பட்டு சாம்ராஜ் செ. ஜோதி | வ.உ.சி நகர் மெயின் ரோடு, ஐந்து விளக்கு அருகில் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி | இரா. லட்சுமணன் பகுதி செயலாளர் |
| 11.05.2025 | சிவ. அருணகிரி சை. இம்ரான் | K.N.S டிப்போ அருகில், கொருக்குபேட்டை ஆர்.கே.நகர் மேற்கு பகுதி | எஸ். ஜெபதாஸ் பாண்டியன் பகுதி செயலாளர் |
| 12.05.2025 | அத்திப்பட்டு சாம்ராஜ் | கவியரசு கண்ணதாசன் நகர் 6–வது பிளாக், E.B அருகில் பெரம்பூர் வடக்கு பகுதி | அ. முருகன் பகுதி செயலாளர் |

மேற்கண்ட கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழுஉறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள்,பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

## மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு’ சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| வ எண் | நாள் | பகுதி | பேச்சாளர்கள் | தலைமை | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 08.05.2025 | கோ.புதூர் பகுதி | பேச்சாளர் : கு.வெங்கட்ராமன்: இளம்பேச்சாளர் : தெ.வர்ஷினி | N.M.புண்ணியமூர்த்தி பகுதி செயலாளர் | மாலை 5.30 | கோ.புதூர் பஸ் ஸ்டாண்ட் |
| 2. | | வில்லாபுரம் பகுதி | பேச்சாளர் : முகவை க.இராமர் இளம் பேச்சாளர் : ர.ஜெயஸ்ரீ | போஸ் முத்தையா பகுதி செயலாளர் | மாலை 6.00 | காளியம்மன் கோவில் தெரு, வில்லாபுரம் |
| 3. | | செல்லூர் பகுதி | பேச்சாளர் : சேப்பாக்கம் வே.பா.பிராபகரன் இளம்பேச்சாளர் : தெ.வர்ஷினி | T.A.குரும்பன் பகுதி செயலாளர் | மாலை 6.30 | NSKதிடல் மீனாம்பாள்புரம் |
| 4. | 09.05.2025 | ஆரப்பாளையம் பகுதி | பேச்சாளர் : முகவை க.இராமர் இளம் பேச்சாளர் : ஞா.கதிரவன் | S.S.மாறன் பகுதி செயலாளர் | மாலை 5.30 | மேலப்பொன்னகரம் |
| 5. | | நெல்பேட்டை பகுதி | பேச்சாளர்: மா.வள்ளிமைந்தன் இளம் பேச்சாளர் : ர.ஜெயஸ்ரீ | A.S.அன்வர் உசேன் பகுதி செயலாளர் | மாலை 6.00 | இஸ்மாயில்புரம் 12வது தெரு |
| 6. | | அண்ணாநகர் பகுதி | பேச்சாளர் : சேப்பாக்கம் வே.பா.பிராபகரன் இளம்பேச்சாளர் : தெ.வர்ஷினி | S.சித்திக்பகுதி செயலாளர் | மாலை 6.30 | யானை குழாய் அண்ணாநகர் |
| 7. | 10.05.2025 | கோரிப்பாளையம் பகுதி | பேச்சாளர் : கு.வெங்கட்ராமன்: இளம்பேச்சாளர் : தெ.வர்ஷினி | G.ராதா கிருஷ்ணன் பகுதி செயலாளர் | மாலை 5.00 | முதலியார் கிழக்கு தெரு, தல்லாகுளம் |
| 8. | | சிம்மக்கல் பகுதி | பேச்சாளர் : முகவை க.இராமர் இளம்பேச்சாளர் : ஞா.கதிரவன் | M. சரவண பாண்டியன் பகுதி செயலாளர் | மாலை 5.30 | பேச்சியம்மன் படித்துறை |
| 9. | | கே.கே.நகர் பகுதி | பேச்சாளர் : சங்கீதா, இரா.கண்ணன் இளம்பேச்சாளர் : தெ.வர்ஷினி | B.அறிவுநிதி பகுதி செயலாளர் | மாலை 6.00 | கே.கே.நகர் (E.B.ஆபிஸ் அருகில்) |
| 10. | | எல்லீஸ் நகர் பகுதி | பேச்சாளர்: கம்பம் மு.கலைக்கமால் இளம்பேச்சாளர் : ஞா.கதிரவன் | P.K.செந்தில் பகுதி செயலாளர் | மாலை 6.30 | ஜின்னா திடல், மகபூப்பாளையம் |
| 11. | 11.05.2025 | மேலமாசி வீதி பகுதி | பேச்சாளர் : கே.இ.செந்தமிழ் அரசு இளம்பேச்சாளர்: ஞா.கதிரவன் | A.யோகராஜ் M.முகமது ரபீக் வட்ட செயலாளர்கள் | மாலை 5.30 | மேலவாசல் வார்டு : 76, 54 |
| 12. | | காமராஜர்புரம் பகுதி | பேச்சாளர்: மா.வள்ளிமைந்தன் இளம் பேச்சாளர் : ர.ஜெயஸ்ரீ | R.M.முத்து பகுதி செயலாளர் | மாலை 6.00 | தினமணி டாக்கிஸ் அருகில் |
| 13. | | தெற்குவாசல் பகுதி | பேச்சாளர் : கு.மாரிமுத்து இளம் பேச்சாளர் : ர.ஜெயஸ்ரீ | ப.ரமேஷ்குமார் எ ஜீவன் பகுதி செயலாளர் | மாலை 6.30 | தெற்குவாசல் பள்ளிவாசல் அருகில் |

மேற்கண்ட பொதுக்கூட்டங்களில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள்,அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கோ.தளபதி எம்.எல்.ஏ.**
செயலாளர், மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.

## சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு’ சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!



## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் , முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற தலைப்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்திடவேண்டும் என்ற அறிவிப்புக்கிணங்க சேலம் மேற்கு மாவட்டதி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக் கூட்டங்கள் பின்வருமாறு நடைபெறும்.

| தேதி | சட்டமன்ற தொகுதி கழக அமைப்பு | கழக பேச்சாளர்கள் |
|---|---|---|
| 8.5.2025 | சங்ககிரி மகுடஞ்சாவடி ஒன்றியம் | திரு.எஸ்.தர்மராஜன் |
| 8.5.2025 | மேட்டூர் மேச்சேரி ஒன்றியம் | திருமதி மு.சி.வித்யாபாரதி |
| 9.5.2025 | எடப்பாடி நங்கவள்ளி ஒன்றியம் | சி.செந்தில்குமார் |
| 9.5.2025 | சங்ககிரி தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | திருமதி மு.சி.வித்யாபாரதி |
| 9.5.2025 | மேட்டூர் கொளத்தூர் ஒன்றியம் | வழக்கறிஞர் திரு.வி.வைத்தியலிங்கம் |
| 10.5.2025 | எடப்பாடி எடப்பாடி ஒன்றியம் | எஸ்.தர்மராஜன் |
| 10.5.2025 | சங்ககிரி சங்ககிரி ஒன்றியம் | சி.செந்தில்குமார் |
| 10.5.2025 | மேட்டூர் மேட்டூர் நகரம் | திருமதி மு.சி.வித்யாபாரதி ரா.கிருத்திகா |
| 11.5.2025 | எடப்பாடி கொங்கணாபுரம் ஒன்றியம் | எஸ்.தர்மராஜன் |
| 11.5.2025 | சங்ககிரி தாரமங்கலம் நகரம் | வழக்கறிஞர் திரு.வி.வைத்தியலிங்கம் |
| 12.5.2025 | எடப்பாடி எடப்பாடி நகரம் | சி.செந்தில்குமார் |
| 12.5.2025 | சங்ககிரி இடங்கணசாலை நகரம் | எஸ்.தர்மராஜன் |

எனவே, இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளைக் கழக வார்டு கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள் முந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA 2) பூத்கமிட்டி உறுப்பினர்கள்(BLC) கழகநிர்வாகிகள், கழகசெயல்வீரர்கள்மற்றும் பொதுமக்கள் பெறும் திரளாக கலந்து கொள்ள தேவையான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி**
சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்

# செஞ்சி பேரூராட்சியில் மே தின விழா கொண்டாட்டம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் செங்கொடியினை ஏற்றி வைத்தார்!

செஞ்சி, மே 6-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் ஊரக வளர்ச்சி உள்ளாட்சி துறையின் (சி.ஐ.டி.யு.) சங்கத்தின் சார்பில் மே 1 தொழிலாளர் தின விழாவை சிறப்பாக கொண்டாடினர்.

நிகழ்ச்சிக்கு பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார். ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை விழுப்புரம் மாவட்ட துணை செயலர் காமராஜ் முன்னிலை வகித்தார்.பேரூராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப் பினருமான செஞ்சி மஸ்தான் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு செங்கொடியினை ஏற்றி வைத்து தொழிலாளர்களுக்கு இனிப்புகளை வழங்கி தொழிலாளர்களுக்கு மே தின வாழ்த்துச் செய்தியினை தெரிவித்தார்.

தொடர்ந்து செஞ்சி பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

விழாவில் செஞ்சி பேரூராட்சி துணை தலைவர் ராஜலட்சுமிசெயல்மணி, நகர செயலாளர் கார்த்திக், அலுவலக இளநிலை உதவியாளர் பாலசபரிஸ்ரீ, துப்புரவு பணி மேற்பரையாளர் செந்தில் முருகன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை சி.ஐ.டி.யு. செஞ்சி நகர தலைவர் சகாயராஜ், செயலர் ஏழுமலை, துணை தலைவர் கஸ்பார், பொருளர் பரசுராமன், துணை செயலர்கள் சவுரிமுத்து, சசிகுமார் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் பேரூராட்சி ஊழி யர்கள், பணியாளர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதேபோல் செஞ்சி குளக்கரை சுமை தூக்கு தொழிலாளர் நல சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செங்கொடியினை ஏற்றி வைத்து தொழிலாளர்களுக்கு தொழிலாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார்.